# 03

**2020ம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான,**

# அறிவுத்தாரகை

## வழிகாட்டல் கருத்தரங்குக் கைேயடு

**ஆசிரியர் : ஏ.எம்.சனூஸ்**

**மட்டக்களப்பு (ஏறூர்)**

**077 16 16 340**

**075 668 12 13**

Name : ........................................................................................

School : ........................................................................................

Year : ........................................................................................

ARIVUTHTHARAHAI A.M.SANOOS

www.paritchai.com/Niroshan kn

## 01. நிரையில் உள்ள எண்ணிக்கையைக் கணித்தல்

(01) ஒரு வரிசையில் ஆனந்துக்கு முன்னால் 5 பேர் நின்றனர். வரிசையில் கடைசியாக நிற்பவர் முதலாவதாக வரும் வகையில் அனைவரும் மறுபக்கத்திற்கு திரும்பும் போது, ஆனந்துக்கு முன்னால் 2 பேர் நின்றனர். எனின், வரிசையில் எத்தனை பேர் நின்றனர்?

(1) 7 (2) 8 (3) 9

(02) ஒரு நிரையில் முன்னாலிருந்து பார்க்கும் போது 7 வதாக தீபன் அமர்ந்திருந்தான். மறுபக்கத்திலிருந்து பார்க்கும் போது 4 வதாக அமர்ந்திருந்தான் எனின், அந்நிரையில் எத்தனை பேர் உள்ளனர்?

(1) 11 (2) 10 (3) 9

(03) ஒரு வரிசையில் முன்னாலிருந்து 5 வதாக மாலா அமர்ந்துள்ளாள். அதே வரிசையில் பின்னாலிருந்து 2 வதாக காசினி அமர்ந்து உள்ளாள். இருவருக்கும் இடையில் 3 பேர் அமர்ந்து இருப்பின், வரிசையில் எத்தனை பேர் உள்ளனர்?

(1) 10 (2) 11 (3) 12

(04) ஓர் அணிநடை பயிற்சியில் சுபாவுக்கு முன்னால் அமலாவும், கீதாவும் நின்றனர். சுபாவுக்கு பின்னால் காஞ்சனா நின்றாள். காஞ்சனாவுக்குப் பின்னால் 5 பேர் அமர்ந்துள்ளனர். இந்நிரையில் எத்தனை பேர் உள்ளனர்?

(1) 9 (2) 7 (3) 8

(05) வரிசையொன்றில் டேவிட் முன்னாலிருந்து 12 வதாகவும், கடைசியிலிருந்து 8 வதாகவும் நிற்கின்றாள்.

(i) இந்த வரிசையில் எத்தனை பேர் உள்ளனர்?
(1) 19 (2) 20 (3) 21

(ii) இந்த வரிசையில் முன்னாலிருந்து 5 வதாக பாலு நின்றால், பாலுவுக்கு பின்னால் எத்தனை பேர் நிற்பர்?
(1) 14 (2) 15 (3) 16

(06) ஓர் அன்னதானம் வழங்கும் நிகழ்வில் குமார் நடுவில் நின்றான். அவனுக்கு முன்னால் 8 பேர் நின்றனர். இறுதியில் சாந்தன் நின்றான்.

(i) அவனுக்குப் பின்னால் எத்தனை பேர் நின்றனர்?
(1) 7 (2) 8 (3) 9

(ii) வரிசையில் எத்தனை பேர் உள்ளனர்?
(1) 18 (2) 17 (3) 16

www.paritchai.com/Niroshan kn
ARIVUTHARAHAI A.M.SANOOS

## 02. தூண்களின் எண்ணிக்கையைக் கணித்தல்.

- தரப்படுகின்ற தளவடிவத்தைப் பொருத்து அதிலுள்ள உச்சிகளைக் கழித்து கணித்தல்
- தரப்படும் தளவடிவம் வட்ட வடிவமாக இருந்தால் கழித்தல் கூடாது.
- முக்கோணி எனில் - 3 உச்சிகளையும் கழித்தல்
- சதுரம், செவ்வகம் எனில் - 4 உச்சிகளையும் கழித்தல்
- ஐங்கோணி எனில் - 5 உச்சிகளையும் கழித்தல்
- நேர்கோடு எனில் - 1 ஐக் கழித்தல்

உதாரணம் : ஒரு சதுரவடிவக் காணியை ஒரு பக்கத்திலிருந்து அவதானிக்கும் போது 5 தூண்கள் தென்படுகின்றன. எனில், காணியைச் சுற்றிவர நடப்பட்டுள்ள தூண்களின் எண்ணிக்கை யாது?




$(5+5+5+5) = 20$
$= 20 - 4$
$= 16$

(01) ஒரு செவ்வக வடிவ காணியை ஒரு பக்கத்திலிருந்து அவதானிக்கும் போது, 10 தூண்கள் காணப்பட்டன. எனில், அக்காணியைச் சுற்றிவர நடப்பட்டுள்ள தூண்கள் எத்தனை?

(1) 44 (2) 40 (3) 36

(02) ஒரு சதுர வடிவ மைதானத்தைச் சுற்றி 48 கொடிக்கம்பங்கள் நடப்பட்டிருப்பின் ஒரு பக்கத்திலுள்ள கொடிக்கம்பங்கள் எத்தனை?

(1) 11 (2) 12 (3) 13

(03) முக்கோண வடிவான உருவின் ஒரு பக்கத்தில் 12 புள்ளிகள் உண்டு எனில், இவ்வுருவிலுள்ள புள்ளிகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை?

(1) 30 (2) 33 (3) 36

(04) ஒரு வட்ட வடிவமான மைதானத்தைச் சுற்றி 80 மின்கம்பங்கள் காணப்படுகின்றன. இரண்டு மின்கம்பங்களுக்கு இடையில் ஒரு கொடி நடப்பட்டிருப்பின், மைதானத்தைச் சுற்றி நடப்பட்டுள்ள கொடிகளின் எண்ணிக்கை எத்தனை?

(1) 40 (2) 76 (3) 80

www.paritchai.com/Niroshan kn
ARIVUTHTHARAHAI A.M.SANOOS

(05) 

எதிரே காட்டப்பட்டுள்ள காணியைச் சுற்றிவர தூண்கள் நடப்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் 5 தூண்கள் இருப்பின், காணியைச் சுற்றிவர எத்தனை தூண்கள் இருக்கும்?

(1) 25 (2) 23 (3) 20

(06) ஒரு வீதியில் 15 மின்கம்பங்கள் காணப்படுகின்றன. இரண்டு மின்கம்பங்களுக்கு இடையிலான தூரம் 5cm ஆகும். எனின், 15 மின்கம்பங்களுக்கும் இடையிலான தூரம் யாது?

(1) 70cm (2) 75cm (3) 80cm

## 03. உறவு முறையை ஒப்பிடுதல்.

- ஒரு குடும்பத்தில் குகன் ஆண்பிள்ளை ஆவான். குகனின் அக்காவுக்கு இரண்டு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உண்டு.

(i) குகனுக்கு எத்தனை சகோதரர்கள் உண்டு?

(1) 3 (2) 2 (3) 1

(ii) குகனுக்கு எத்தனை சகோதரிகள் உண்டு?

(1) 2 (2) 3 (3) 4




(01) ஒரு பெற்றோருக்கு மது இரண்டாவது பிள்ளையாகும். இவனது அண்ணனுக்கு இரு சகோதரர்களும், ஒரு சகோதரியும் உண்டு.

(i) மதுவின் குடும்பத்திலுள்ளவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4 (3) 6

www.paritchai.com/Niroshan kn
ARIVUTHTHARAHAI A.M.SANOOS

(ii) மதுவுக்கு எத்தனை சகோதரர்கள் உண்டு?

(1) 2 (2) 3 (3) 4

(02) அருண், சாந்தியின் சகோதரனாகும். சாந்திக்கு ஓர் அண்ணாவும், இரண்டு தங்கைகளும், ஓர் தம்பியும் உண்டு.

(i) அருணுக்கு எத்தனை சகோதரர்கள் உண்டு?

(1) 1 (2) 2 (3) 3

(ii) அருணுக்கு எத்தனை சகோதரிகள் உண்டு?

(1) 2 (2) 3 (3) 4

(iii) அருணின் குடும்பத்தில் எத்தனை பேர் உள்ளனர்?

(1) 7 (2) 8 (3) 9

(03) நான் ஓர் பெண் ஆவேன். சந்திரனின் மகன் எனது சிற்றப்பா எனில், சந்திரனுக்கும் எனக்கும் உள்ள உறவு முறை யாது?

(1) சந்திரன், எனது பாட்டன்
(2) சந்திரன், எனது மாமா
(3) சந்திரன், எனது தந்தை

(04) ஒருவர் புகைப்படம் ஒன்றைக்காட்டி இதில் உள்ளவர் என் அம்மா. ஆனால் நான் அவரின் மகன் அல்ல. எனில், புகைப்படத்தில் உள்ளவருக்கு நான் யார்?

(1) கணவன் (2) மகள் (3) மகன்

(05) ஒரு வழக்கில் நீதிபதியின் மகன் திருடன். திருடனின் அப்பா பொலிஸ். எனின்,

(i) திருடனுக்கு நீதிபதி யார்?

(1) அப்பா (2) அம்மா (3) மாமா

(ii) பொலிஸாருக்கு நீதிபதி யார்?

(1) சித்தி (2) சகோதரி (3) மனைவி

(06) என் அருகில் இருப்பவர் என் அம்மாவின் சகோதரர். எனின் அம்மாவின் சகோதருக்கு நான் யார்?

(1) மருமகன் (2) மாமா (3) மகன்

www.paritchai.com/Niroshan kn
ARIVUTHTHARAHAI A.M.SANOOS

## 04. காலம் கணித்தல்.

☛ தெரிந்து கொள்வோம்.

| முதல் நாள் | | கடைசி நாள் | | வாரங்களின் எண்ணிக்கை | | வாரங்களின் கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | → | 29 | → | 5 | → | 75 |
| 2 | → | 30 | → | 5 | → | 80 |
| 3 | → | 31 | → | 5 | → | 85 |

● ஒரு வருடத்தில் உள்ள.....

☛ நாட்களின் எண்ணிக்கை - 365 (சாதாரண வருடம்)
☛ நாட்களின் எண்ணிக்கை - 366 (லீப்வருடம்)
☛ வாரங்களின் எண்ணிக்கை - 52
☛ மாதங்களின் எண்ணிக்கை - 12

● ஒரு மாதத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கை

☛ 28 நாட்கள் - பெப்பிரவரி (சாதாரண வருடம்)
☛ 29 நாட்கள் - பெப்பிரவரி (லீப் வருடம்)
☛ 30 நாட்கள் - 4 (ஏப்பிரல், யூன், செப்டம்பர், நவம்பர்)
☛ 31 நாட்கள் - 7 (ஜனவரி, மார்ச், மே, யூலை, ஆகஸ்ட், ஒக்டோபர், டிசம்பர்)

● ஒரு வருடத்தில் உள்ள கிழமைகளின் எண்ணிக்கை

☛ சாதாரண வருடம் - ஜனவரி 1ஆம் திகதி வரும் கிழமைகள் - 53
ஏனைய ஆறு நாட்கள் வரும் கிழமைகள் - 52

☛ லீப் வருடம் - ஜனவரி 1ஆம், 2ஆம் திகதி வரும் கிழமைகள் - 53
ஏனைய 5 நாட்கள் வரும் கிழமைகள் - 52

♦ சாதாரண வருடத்தில் ஜனவரி 1ஆம் திகதி என்ன கிழமையோ, அவ்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதியும் அதே கிழமையாக அமையும்.

♦ லீப் வருடத்தில் ஜனவரி 1ஆம் திகதி என்ன கிழமையோ அவ்வாண்டில் டிசம்பர் 31ஆம் திகதி, 1ஆம் திகதிக்கு அடுத்த நாளாக அமையும்.

ARIVUTHTHARAHAI
A.M.SANOOS
www.paritchai.com/Niroshan kn

● **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

(01) 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி திங்கட்கிழமை எனில், அம்மாதம் 29ஆம் திகதி என்ன கிழமை?

(1) திங்கள் (2) செவ்வாய் (3) புதன்

(02) 2017ஆம் ஆண்டு யூன் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனில், அம்மாதத்தின் 30வது நாள் என்ன கிழமை?

(1) சனி (2) ஞாயிறு (3) திங்கள்

(03) 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி செவ்வாய்ககிழமை எனின், அம்மாதம் 31ஆம் திகதி என்ன கிழமை?

(1) ஞாயிறு (2) திங்கள் (3) செவ்வாய்

(04) சாதாரண வருடமொன்றில் டிசம்பர் 2 ஆம் திகதி புதன்கிழமையாகும்.

(i) 29ஆம் திகதி என்ன கிழமை?

(1) திங்கள் (2) செவ்வாய் (3) புதன்

(ii) 30ஆம் திகதி என்ன கிழமை?

(1) திங்கள் (2) செவ்வாய் (3) புதன்

(iii) 31ஆம் திகதி என்ன கிழமை?

(1) செவ்வாய் (2) புதன் (3) வியாழன்

(05) 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் 5ஆம் நாள் புதன் கிழமையாகும். இம்மாதத்திலுள்ள இம்மாதத்திலுள்ள ஞாயிற்றுக்கிழமைகளின் எண்ணிக்கை யாது?

(1) 3 (2) 4 (3) 5

(06) 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடுவில் வரும் திகதி யாது?

(1) 14 (2) 15 (3) 16

(07) குறித்த ஆண்டின் ஒக்டோபர் 17ஆம் திகதி வியாழக்கிழமை ஆகும். அவ்வாண்டின் நவம்பர் 17ஆம் திகதி என்ன கிழமை?

(1) ஞாயிறு (2) சனி (3) வெள்ளி

(08) 2017ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி சனி எனின், டிசம்பர் 31ஆம் திகதி என்ன கிழமை?

(1) வெள்ளி (2) சனி (3) ஞாயிறு

(09) 2020ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி புதன்கிழமை எனின், டிசமபர் 30 ஆம் திகதி என்ன கிழமை?

(1) செவ்வாய் (2) புதன் (3) வியாழன்

(10) 2019ஆம் ஆண்டு டிசம்பர் 29ஆம் திகதி வியாழன் ஆகும். எனின் அதே ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி என்ன கிழமை?

(1) திங்கள் (2) ஞாயிறு (3) சனி

(11) 2009ஆம் ஆண்டில் 365 நாட்கள் உள்ளன. அவ்வாண்டில் 1ஆம் நாள் வியாழன் எனின், அவ்வாண்டில் எத்தனை வியாழக்கிழமைகள் உள்ளன?

(1) 50 (2) 52 (3) 53

(12) 2013ஆம் ஆண்டு நடுவில் வரும் தினம் யாது?

(1) யூலை - 1 (2) யூலை - 2 (3) யூலை - 3

www.paritchai.com/Niroshan kn
ARIVUTHARAHAI
A.M.SANOOS

(13) 2019ஆம் ஆண்டில் 28 நாட்களைக் கொண்ட மாதங்கள் எத்தனை உள்ளன?

(1) யூலை - 1 (2) யூலை - 2 (3) யூலை - 3

(14) குறித்த வருடமொன்றின் 1ஆம் நாள் புதன்கிழமை எனின் அவ்வருடத்தின்,

(i) 300ஆம் நாள் என்ன கிழமை?

(1) ஞாயிறு (2) திங்கள் (3) செவ்வாய்

(ii) 263ஆம் நாள் என்ன கிழமை?

(1) வெள்ளி (2) சனி (3) ஞாயிறு

(iii) 345ஆம் நாள் என்ன கிழமை?

(1) புதன் (2) வியாழன் (3) வெள்ளி

(15) லீப் வருடத்தில் 285ஆம் நாள் ஞாயிறு எனின் அவ்வருடத்தின் 1ஆம் நாள் என்ன கிழமை?

(1) வியாழன் (2) புதன் (3) செவ்வாய்

(16) ஜனவரி மாதம் 1ஆம் திகதி வெள்ளி எனின், அம்மாதத்தில் இடம்பெறும் வியாழக்கிழமைகளினதும், வெள்ளிக்கிழமைகளினதும் எண்ணிக்கை முறையே,

(1) 4, 5 (2) 5, 4 (3) 5, 5

(17) ஒக்டோபர் மாதத்தின் முதலாம் நாள் ஞாயிறு எனின், அம்மாதத்திலுள்ள ஞாயிற்றுக் கிழமைகளின் கூட்டுத்தொகை யாது?

(1) 75 (2) 80 (3) 85

(18) நவம்பர் மாதத்தின் 30ஆம் திகதி வெள்ளி எனின், அம்மாதத்தில் உள்ள வெள்ளிக்கிழமைகளின் கூட்டுத்தொகைக்குச் சமமான பெறுமானம் யாது?

(1) 75 (2) 80 (3) 85

(19) மே மாதத்தின் முதலாம் திகதி திங்கள் எனின், அம்மாதத்திலுள்ள புதன்கிழமைகளின் கூட்டுத்தொகை யாது?

(1) 75 (2) 80 (3) 85

(20) கமலினி தனது 15வது பிறந்த நாளை 2016ஆம் ஆண்டு கொண்டாடினாள். தனது 16வது பிறந்த நாளை அவள் எப்போது கொண்டாடுவாள்?

(1) 2017 (2) 2018 (3) 2020

## 05. நேரங்களைக் கூட்டல்.

(01)

| மணி | நிமிடம் |
|---|---|
| 2 | 30 |
| + 1 | 25 |
| | |

(02)

| மணி | நிமிடம் |
|---|---|
| 1 | 40 |
| + | 50 |
| | |

(03)

| மணி | நிமிடம் |
|---|---|
| 12 | 25 |
| + 4 | 37 |
| | |

(04)

| மணி | நிமிடம் |
|---|---|
| 5 | 14 |
| + 1 | 46 |
| | |

–✱✱✱–

www.paritchai.com/Niroshan kn
ARIVUTHARAHAI A.M.SANOOS